தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
பதவி வெற்றிடங்கள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் தற்போது வெற்றிடமாகக் காணப்படுகின்ற பின்வரும் பதவிகளுக்கு தகைமை வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**1.**<u>பணிப்பாளர் நாயகம் -**HM 2-1**(01பதவி)</u>

<u>**தகைமைகள்**</u>

<u>வெளிவாரி விண்ணப்பதாரிகள் (கீழ்குறிப்பிட்ட 1 அல்லது 2 அல்லது 3)</u>

1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/ விஞ்ஞானம் / விவசாயம்/ பொது நிர்வாகம்/ வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவம் அல்லது உரிய வேறு துறையொன்றில் ஆரம்ப பட்டம்

**அத்துடன்**

சமூகவியல்/விஞ்ஞானம் / விவசாயம்/ பொது நிர்வாகம்/ வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவம் அல்லது உரிய வேறு துறையொன்றில் பட்டப் பின் படிப்புத் தகைமை (Master) அல்லது பதவியின் விடயப் பரப்பு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவகமொன்றின் சக உறுப்புரிமையைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை, வேறு அரச நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த துறையில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 18 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல். இதில் 05 வருட காலம் சிறந்த சேவை அறிக்கையுடன் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான பதவியொன்றில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

2) பதவி தொடர்பான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவனமொன்றில் பூரண உறுப்புரிமையைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை, வேறு அரச நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 18 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

3) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல் / விஞ்ஞானம் / விவசாயம்/ பொது நிர்வாகம்/ வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவம் அல்லது உரிய வேறு துறையொன்றில் ஆரம்ப பட்டம்

**அத்துடன்**

சமூகவியல் / விஞ்ஞானம் / விவசாயம்/ பொது நிர்வாகம்/ வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவம் அல்லது உரிய வேறு துறையொன்றில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

ஆரம்ப பட்டத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை, வேறு அரச நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் சிறந்த சேவை அறிக்கையுடன் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான

பதவியொன்றில் 05 வருட சேவைக்காலம் உள்ளடங்கலாக முகாமைத்துவ அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

<u>உள்வாரி விண்ணப்பதாரிகள்</u>

பதவிக்குரிய விடயத்துறையில் HM (1-3) மட்டத்திலான சிரேஷ்ட முகாமைத்துவப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

மற்றும்

பல்வகை குழுக்களுக்கு தலைமைத்துவம் வழங்குதல் மற்றும் அவர்களை வழிப்படுத்துவதை உறுதி செய்யக்கூடிய ஆற்றல் மற்றும் மனிதவளம் மற்றும் ஏனைய வளங்களை சரியான முறையில் ஈடுபடுத்தல், வினைத்திறன்மிக்க முகாமைத்துவம் பற்றிய அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

- **சேவை வகுதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்** :

முு.சே.தி. சுற்றறிக்கை 2/2016(I) – HM 2-1 ரூபா(91,645-12×2,700=124,045)

**2.<u>பிரதிப் பணிப்பாளர் நாயகம் -HM 1-3 (01 பதவி)</u>**

**தகைமைகள்**

**<u>வெளிவாரி விண்ணப்பதாரிகள் (கீழ்குறிப்பிட்ட 1அல்லது 2)</u>**

1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/ விஞ்ஞானம் /பொது நிர்வாகம்/ வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவம் அல்லது உரிய வேறு துறையொன்றில் ஆரம்ப பட்டம்

**அத்துடன்**

சமூகவியல் / விஞ்ஞானம் / பொது நிர்வாகம்/ வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவ துறைகளில் பட்டப் பின் படிப்புத் தகைமை (Master) அல்லது பதவியின் விடயப்பரப்பு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவகமொன்றின் சகஉறுப்புரிமையைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை, வேறு அரச நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த துறையில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2) பதவி தொடர்பான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவனமொன்றில் பூரண உறுப்புரிமையைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை, வேறு அரச நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு (கீழ் குறிப்பிட்ட 1அல்லது 2)

1) மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரிகள் பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

2) பதவிக்குரிய விடயத்துறையில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் (HM 1-1) குறைந்தபட்சம் 05 வருட திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

- **சேவை வகுதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்** :

  மு.சே.தி. சுற்றறிக்கை 2/2016(I) –HM 1-3 ரூபா (86,865-15x2,270-120,915)

  மேற்குறிப்பிடப்பட்ட 01 மற்றும் 02 பதவிகளுக்கான பொதுவான விடயங்கள்

- **வயது**: 35 வயதுக்குக் குறையாதவராகவும், 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்சளவான வயதெல்லை ஏற்புடையதாவதில்லை.

- **ஆட்சேர்ப்புச் செய்து கொள்ளும் முறையியல்:** நியமன அதிகாரியினால் நியமனம் செய்யப்படும் சபையொன்றினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்பு சார் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

- **நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் முறை:**

| | | |
|---|---|---|
| குறிப்பிட்ட மேலதிக அனுபவம் | - | 30 புள்ளிகள் |
| குறிப்பிட்ட மேலதிக கல்வி மற்றும் தொழில் தகமைகள் | - | 30 புள்ளிகள் |
| ஏனைய வெற்றிகள் (other achievements) | - | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டும் திறன்கள் | - | 25 புள்ளிகள் |

- ***ஏனைய சிறப்புரிமைகள்:*** *அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக அரசின் அங்கீகரிக்கப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு அமைய வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு, உத்தியோகபூர்வ வாகனம்/போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவு மற்றும் ஏனைய அரசின் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் உரித்தாகும். மேலும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 12% ஆன பங்களிப்பையும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% ஆன பங்களிப்பையும் அதிகாரசபை வழங்கும்.*

**3.பணிப்பாளர் - நிர்வாகம் மற்றும் மனிதவளம் -HM 1-1 (01பதவி)**

**தகைமைகள்**

வெளிவாரி விண்ணப்பதாரிகள் (கீழ்குறிப்பிட்ட 1அல்லது 2)

1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / வியாபார நிர்வாகம்/ சமூகவியல் / விஞ்ஞானம் அல்லது உரிய வேறு துறையொன்றில் ஆரம்ப பட்டம்

**அத்துடன்**

முகாமைத்துவம்/ பொது நிர்வாகம்/ வியாபார நிர்வாகம்/ சமூகவியல் அல்லது விஞ்ஞானம் பற்றிய பட்டப் பின் படிப்புத் தகைமை (Master) அல்லது பதவியின் விடயப்பரப்பு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவகமொன்றின் சகஉறுப்புரிமையைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை, வேறு அரச நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த துறையில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 12 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2) பதவி தொடர்பான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவனமொன்றில் பூரண உறுப்புரிமையைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை, வேறு அரச நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 12 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

<u>உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு (கீழ்குறிப்பிட்ட 1அல்லது 2)</u>

1) மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரிகள் பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

2) பதவிக்குரிய விடயத் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் (MM 1-1) 1 வது தரத்தில் குறைந்தபட்சம் 05 வருட திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

## 4. <u>சிகிச்சை உளவியலாளர் HM 1-1 (01 பதவி )</u>

**தகைமைகள்**

<u>வெளிவாரி விண்ணப்பதாரிகள்</u>

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உளவியல் தொடர்பான முதலாவது பட்டம்

**அத்துடன்**

சிகிச்சை உளவியல் பற்றிய பட்டப் பின் படிப்புத் தகைமை (Master) அல்லது அதற்குச் சமமான பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்திருத்தல்

**மற்றும்**

சிகிச்சை உளவியலாளராக சிகிச்சை பின்னணியுடன் இரண்டு (02) வருட கால அனுபவத்தைப் பெற்றிருப்பதோடு அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை மற்றும் வேறு அரச நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 12 வருட கால அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

<u>உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு (கீழ்குறிப்பிட்ட 1அல்லது 2)</u>

1. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரிகள் பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. முகாமைத்துவ மட்டத்தில் (MM) 1வது தரத்தைச் சேர்ந்த ஒரு பதவியில் குறைந்தபட்சம் 05 வருட திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் சிகிச்சை உளவியல் தொடர்பான பட்டப் பின்படிப்பை (Masters) பூர்த்தி செய்திருத்தல்.

மேற்குறிப்பிடப்பட்ட 03 மற்றும் 04 பதவிகளுக்கான பொதுவான விடயங்கள்

- **சேவை வகுதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்** :

  மு.சே.தி. சுற்றறிக்கை 2/2016(I)–HM 1-1 (80,295-15 x2,270-114,345)

- **வயது**: 35 வயதுக்குக் குறையாதவராகவும், 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்சளவான வயதெல்லை ஏற்புடையதாவதில்லை.

- **ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளும் முறையியல்:** நியமன அதிகாரியினால் நியமனம் செய்யப்படுகின்ற சபையொன்றினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்துகொள்வது மேற்கொள்ளப்படும்.

- **நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் முறை:**

| | | |
|---|---|---|
| குறிப்பிட்ட மேலதிக அனுபவம் | - | 30 புள்ளிகள் |
| குறிப்பிட்ட மேலதிக கல்வி மற்றும் தொழில் தகமைகள் | - | 30 புள்ளிகள் |
| ஏனைய வெற்றிகள் (other achievements) | - | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டும் திறன்கள் | - | 25 புள்ளிகள் |

- ***ஏனைய சிறப்புரிமைகள்** : அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக அரசின் அங்கீகரிக்கப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு அமைய வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு, உத்தியோகபூர்வ வாகனம் / போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவு மற்றும் ஏனைய அரசின் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் உரித்தாகும். மேலும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 12% ஆன பங்களிப்பையும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% ஆன பங்களிப்பையும் அதிகாரசபை வழங்கும்.*

**5.உதவிப் பணிப்பாளர் (சட்டத்தை அமுல்படுத்தல்) MM 1-1 (01 பதவி)**

**தகைமைகள்**

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குற்றவியல் அல்லது சட்டம் தொடர்பான பட்டத்துடன் சட்டத்தரணி ஒருவராக உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

**அத்துடன்**

பதவிக்குரிய துறையில் குறைந்தபட்சம் 02 வருடகால பட்டப்பின் தொழில்சார் அனுபவம்.

உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு (கீழ்குறிப்பிட்ட 1அல்லது 2)

1). மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரிகள் பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

2). பதவிக்குரிய விடயத்துறையில் கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் (JM) குறைந்தபட்சம் 05 வருட திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் சட்டத்தரணி ஒருவராக உயர் நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.

**6.<u>சட்ட அலுவலர் MM 1-1 (03பதவி)</u>**

தகைமைகள்

<u>வெளிவாரி விண்ணப்பதாரிகள்</u>

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் பற்றிய பட்டத்துடன் சட்டத்தரணி ஒருவராக உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

**அத்துடன்**

ஆரம்ப பட்டத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் பதவிக்குரிய துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடகால பட்டப் பின் தொழில்சார் அனுபவம்

<u>உள்வாரி விண்ணப்பதாரிகள்</u>

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரிகள் பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

<u>மேற்குறிப்பிடப்பட்டுள்ள 05 மற்றும் 06 பதவிகளுக்கான பொதுவான விடயங்கள்</u>

- **சேவை வகுதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்** :

  மு.சே.தி. சுற்றறிக்கை 2/2016-MM1-1 ரூபா (53,175-10x1375-15x1910-95,575)

- **வயது**: 22 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்சளவான வயதெல்லை ஏற்புடையதாவதில்லை.

- **ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளும் முறையியல்:** நியமன அதிகாரியினால் நியமனம் செய்யப்படுகின்ற சபையொன்றினால் நடாத்தப்படுகின்ற எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை மற்றும்/அல்லது கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

- **நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் முறை:**

| | | |
|---|---|---|
| குறிப்பிட்ட மேலதிக அனுபவம் | - | 30 புள்ளிகள் |
| குறிப்பிட்ட மேலதிக கல்வி மற்றும் தொழில் தகமைகள் | - | 30 புள்ளிகள் |
| ஏனைய வெற்றிகள் (other achievements) | - | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டும் திறன்கள் | - | 25 புள்ளிகள |

- ***ஏனைய சிறப்புரிமைகள்**: அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக அரசின் அங்கீகரிக்கப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு அமைய வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு, மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் உரித்தாகும். மேலும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 12%ஆன பங்களிப்பையும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% ஆன பங்களிப்பையும் அதிகாரசபை வழங்கும்.*

**<u>பொதுவான விடயங்கள்</u>**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதுடன், சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் மற்றும் பதவிக்குப் பொறுப்பளிக்கப்படுகின்ற பணிகளை சிறப்பான முறையில் நிறைவேற்றுவதற்கு மற்றும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உளரீதியான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இப்பதவிகளுக்கான மாதிரி விண்ணப்பப்படிவத்தை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் இணையத்தளமான **www.childprotection.gov.lk** ஊடாக தரவிறக்கம் செய்துகொள்ள முடியும் என்பதுடன், முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை **2024 டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் மாத்திரம்** பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

சகல விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு மற்றும் கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் தொழில்சார் அனுபவத்தை உறுதி செய்யக்கூடிய சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் சகிதம் உறவினர்கள் அல்லாத சிபாரிசு செய்யக்கூடியவர்கள் இருவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களையும் அனுப்பிவைத்தல் வேண்டும். யாராயினும் விண்ணப்பதாரி ஒருவர் ஒரு பதவிக்கு மேல் விண்ணப்பிப்பதாயின், குறித்த ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கின்ற பதவியைக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். அரச திணைக்களம் / அரச கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபைகளில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களை நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு இணங்க சமர்ப்பிக்கப்படாத, பூரணமற்ற, தெளிவற்ற மற்றும் மேலுள்ள தேவைப்பாடுகளை முழுமையாக பூர்த்தி செய்யாதுள்ள மற்றும் தாமதமாக கிடைக்கின்ற விண்ணப்பப்படிவங்கள் முன் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். இப்பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஏதேனுமொரு வகையில் அழுத்தம் கொடுப்பது தகுதியீனமொன்றாகக் கருதப்படும். தெரிந்து பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்து மூலமான போட்டிப் பரீட்சைக்கு மற்றும் /அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இந்த ஆட்சேர்ப்புத் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் முடிவு இறுதி முடிவாக அமையும்.

தவிசாளர்
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
இல. 330, தலவத்துகொட வீதி,
மாதிவெல,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர
தொலைபேசி - 0112778911- 14
இணையத்தளம் - www.childprotection.gov.lk